# IN THE COURT OF I ADDITIONAL DISTRICT JUDGE, CUDDALORE.
# O.S.No. 154 Of 2019

| | | |
|---|---|---|
| **Witness Rank** | : | DW1 |
| **Name of the Witness** | : | பாஸ்கர் |
| **Father's Name** | : | |
| **Age** | : | |
| **Occupation** | : | |
| **Address** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 03rd day of August, 2026.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை** :-

வாதியின் கணவர் சங்கரநாராயணன், நான் மற்றும் ராஜா எட்வார்டு ஆகியோர் சேர்ந்து பைனான்ஸ் நிறுவனம் 2009-ல் ஆரம்பித்தோம். அதன் பெயர் R.B.S நிறுவனம் ஆகும். தலா சுமார் 5 லட்சம் முதலீடு செய்து இருப்போம். 8 – 9 வருடத்தில் அந்த பைனான்ஸ் நிறுவனத்தை மூடிவிட்டோம். வாடகை இடத்தில் நிறுவனத்தை நடத்தினோம். மூடப்பட்ட பிறகு கணக்கு பைசல் செய்யவில்லை. Partnership deed எழுதிக்கொண்டோம். மூடுவதற்கு Dissolution deed எதுவும் எழுதிக்கொள்ளவில்லை. தேவைப்படும் மக்களுக்கு கடன் வழங்கினோம் என்றால் சரிதான்.

பதிவாளரிடம் பங்குதாரர் நிறுவனத்தின் கணக்கை தாக்கல் செய்யவில்லை. வருமானவரி கணக்கு தாக்கல் செய்தோம். எனக்கு தனிப்பட்ட முறையில் சிட்டியூனியன் வங்கியில் கணக்கு உள்ளது. நிறுவனத்தின் பெயரில் வங்கி கணக்கு அதே சிட்டியூனியன் வங்கியில் இருந்தது. எனது தனிப்பட்ட வங்கி கணக்கு தற்போதும் செயல்பாட்டில் உள்ளது. வாதசாஆ. 1 காசோலை என்னுடையது தான். வாதசாஆ. 1 காசோலைக்குரிய அடிக்கட்டை என்னிடம் இல்லை. வாதசாஆ. 1

காசோலைக்குரிய பணத்தை கொடுக்கவில்லை என வாதி தரப்பில் அனுப்பப்பட்ட வாதசாஆ 2 அறிவிப்பு எனக்கு கிடைக்க பெற்றது. அதற்கு நான் வாதசாஆ .4 பதில் அறிவிப்பு கொடுத்துள்ளேன். வாதசாஆ. 1 காசோலை நான் கொடுக்கவில்லை என்று அந்த பதில் அறிவிப்பில் தெரிவித்துள்ளேன். நிறுவனத்தை மூடிவிட்ட பிறகு அந்த வாடகை இடத்தை காலி செய்து கொடுத்தோமா என்றால் நான் வெளியே வந்து விட்டேன் மற்ற பங்குதாரர்கள் காலி செய்து கொடுத்தார்களா என்று தெரியவில்லை. நான் இருந்த வரை பங்குதாரர் நிறுவனத்தில் active ஆக இருந்தேன். வாதசாஆ. 2 அறிவிப்பு வந்த பிறகு தான் ஒரு காசோலை தொலைந்த விவரம் எனக்கு தெரிய வந்தது. இது குறித்து வங்கிக்கு நான் தெரியப்படுத்தவில்லை. காவல் நிலையத்திலும் புகார் கொடுக்கவில்லை.

நான் சண்டை போட்டு விட்டு வெளியே வந்து விட்டேன். அலுவலகத்தில் இருந்த காசோலையை அவர்கள் எடுத்துக்கொண்டதாக வழக்காடுகிறேன். நான் வாதியிடம் கடன் பெற்றுவிட்டு அதற்காக வாதசாஆ 1 காசோலை கொடுத்து விட்டு தற்போது வழக்கிற்காக பொய்யான சங்கதிகள் கூறி பொய் வழக்காடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது வங்கி கணக்கில் தொகை இல்லை என்று நான் கேட்டுக்கொண்ட காரணத்தினால் காசோலை வங்கியில் செலுத்தப்படவில்லை என்றாலும் வாதி கணவரின் கூட்டாளி என்பதால் காசோலையை வங்கியில் செலுத்தப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. பெற்ற பணத்தை ஏமாற்ற வேண்டி தவறாக கட்சி ஆடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*

*Sd/-G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*